ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,659 — 1959 පෙබරවාරි 6 වැනි සිකුරාදා — 6.2.1959

11,659 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## அறிவித்தல்கள்

### 1939 ம் ஆண்டின் 61 ம் இலக்க நகர சங்கங்கள் சட்டம்

இரத்தினபுரிக்கு மாற்றலாகிச் செல்லும் உள்ளூராட்சி உதவி அதிகாரி திரு. எல். ஜீ. சிறிவர்த்தனவுக்குப் பதிலாக, 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி தொடக்கம், வெலிகமை நகரின் கருமங்களைப் பரிபாலிப்பதற்கு உள்ளூராட்சி உதவி அதிகாரி திரு. பீ. கே. திசநாயகா, வெலிகமை விசேஷ அதிகாரியாகப் பதவி வகிப்பாரென்று இத்தால் பொதுஜனங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபயசிங்க,
பதில் உள்ளூராட்சி அதிகாரி.

கொழும்பு,
1959 ம் ஞூ ஜனவரி மீ 19 ந் உ.

---

## நானாவித அறிவித்தல்கள்

### கோறளை மத்திய பிரிவு கிராமச் சங்கம், வாழைச்சேனை

#### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட விதிகள் அடங்கிய அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்க திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணும் அட்டவணையிற் காண்போரிடமிருந்து 1959 ம் ஆண்டுக்கு புச்சர் லைசென்ஸ் தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த கிராமச் சங்க இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுப்பதையிட்ட காரணங்கள் காட்டாத படியால் 1959 ம் ஆண்டுக்கு லைசென்ஸ் கொடுப்பதற்குச் சிபார்சு பண்ணுகிறேன்.

**அட்டவணை**

| விண்ணப்பக்காரர் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| 1. அ. சீனி முகம்மது .. | வாழைச்சேனை .. | வாழைச்சேனை மார்க்கட் |
| 2. செ. செய்யது அகம்மது .. | ஷ .. | வாழைச்சேனை பகிரங்க ரேட்டுக்கடை |
| 3. கே. ஓ. யோசப் .. | ஷ .. | ஷ |
| 4. அ. வி. அகம்மது உசனர் | ஓட்டமாவடி .. | ஓட்டமாவடி மார்க்கட் |
| 5. மு. உமறு லெவ்வை .. | மிருவோடை .. | மிருவோடை மார்க்கட் |

இ. முஸ்தபாலெவ்வை காஜியார், ஜே. பி.,
அக்கிராசனர்,
கோறளை மத்திய கிராமச் சங்கம்.

கி. ச. காரியாலயம், வாழைச்சேனை,
1959 ம் ஞூ ஜனவரி 27 ந் உ.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன் பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. **சந்தா விகிதங்கள்—**

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சாந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர்** அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது